பக்கங்கள்: ஆறு
விலை ரூபா 5-00

Registered as a News Paper in SriLanka

# வலம்புரி
## VALAMPURI

மங்கையரின் அங்கமெல்லாம் தங்க நகைகளால் மின்னிப் பேசிட இன்றேவிரையுங்கள்!
அர்ச்சனா ஜுவலர்ஸ்
118, கஸ்தூரியார் வீதி,
176/1, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.
(இ/1870)

சங்கு 02 வள்ளுவர் ஆண்டு 2032 சித்திரை 19 புதன்கிழமை 02-05-2001 தொலைபேசி: 3378 ஒலி: 133

## அரசின் அறிக்கைக்கு புலிகள் கடும் கண்டனம்
# பேச்சு வார்த்தைக்கு முன்னதாக
# இருதரப்பு யுத்த நிறுத்தம் அவசியம்

### புலிகளின் வன்னித் தலைமையகம் அறிக்கை

(வவுனியா நிருபர்)

**சிறிலங்கா அரசின் அபத்தமானதும், ஆபத்தானதுமான போர்க் கொள்கையினால் சமாதான சூழ்நிலை சீர்குலைந்துள்ளது.**

**யாழ்ப்பாணத்தில் விடுதலைப்புலிகள் மீது அரசு பாரிய இராணுவத் தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டதால் நோர்வே அரசின் சமாதான முயற்சிக்கு பெரிய குந்தகம் விளைவித்துள்ளது.**

**நேர்மையான நோக்கத்துடன் ஒருதலைப்பட்சமான போர்நிறுத்தம் என்ற வடிவத்தில் நாம் சிங்கள தேசத்திற்கு நான்கு மாதத்துக்கு அமைதி வழங்கிய போது அரசு எம் மீது நான்கு நாட்கள் யுத்தத்தைக் கட்டவிழ்த்துவிட்டது.**

தகவல் தொடர்பு அமைச்சு விடுத்திருந்த 18பக்க அறிக்கையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களைக் கண்டித்து விடுதலைப்புலிகள் வன்னித் தலைமைக்கு செயலகம் விடுத்துள்ள அதிகாரபூர்வ கண்டன அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த கண்டன அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

நேர்மையான நோக்கத்துடன், ஒரு தலைப்பட்சமான போர்நிறுத்தம் என்ற வடிவத்தில் நாம் சிங்கள தேசத்திற்கு நான்குமாத காலத்திற்கு அமைதியை வழங்கினோம். ஆனால் சிங்கள அரசாங்கமோ எமது நல்லெண்ண முயற்சியை ஒரு வகை ஏமாற்றுவித்தையென நிராகரித்தது. அத்துடன் எமது நான்கு மாத கால சமாதானத்திற்கு பதிலாக நான்கு நாள் யுத்தத்தை எமக்கு எதிராக கட்டவிழ்த்துவிட்டது. இந்தப் போர் ஒரு பயங்கரமான இரத்தக் களறியாக

←6ஆம் பக்கம் பார்க்க

## எரிக்சோல் - கதிர்காமர் சந்தித்துப் பேசினர்

(கொழும்பு)

கொழும்புவந்துள்ள நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் வெளிவிவகார அமைச்சர் லஷ்மன் கதிர்காமரை நேற்றிரவு சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இதேவேளை இலங்கைக்கான இந்தியத் தூதுவர் கோபால கிருஷ்ணகாந்தியையும் எரிக்சோல் நேற்று சந்தித்துப் பேசியுள்ளார்.

மூன்றுநாள் விஜயத்தை முடித்துக்கொண்டு இன்று மாலை பயணமாகும் எரிக்சோல் ஹெய்ம் நோர்வே யூடாகலண்டன் சென்று விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசுவார் என்று நோர்வே தூதரக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ

## அரசின் சமாதான பேச்சில் நம்பிக்கை ஏற்படவில்லை!
### எரிக்சோலிடம் ரணில் விபரிப்பு

(கொழும்பு)

எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்காவை நேற்று மாலை நோர்வேயின் விசேட தூதுவர் எரிக்சோல் ஹெய்ம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

இந்தப்பேச்சுவார்த்தையின் போது தமிழீழ விடுதலைப் புலிகள் யுத்தநிறுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது குறித்தும், அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்தும் நோர்வே தூதுவர் ரணில் விக்கிரமசிங்காவிடம் எடுத்துக் கூறியுள்ளார்.

இதேவேளை நேற்று முன்தி [illegible]

# தமிழ்மக்களுக்குவழங்க வேண்டியஉரிமைகளை
# புலிகளுடன் பேசித் தீர்க்கஅரசு விரும்புகிறது
### செய்மதி மூலம் ஜனாதிபதி உரை



(கொழும்பு)

கடந்த ஏழு ஆண்டுகளில் பொதுஜன ஐக்கிய முன்னனி அரசாங்கம் பத்து தேர்தல்களைச் சந்தித்துள்ளது. இத்தேர்தல்களின் போது அரசாங்கம் தென்னிலங்கையில் வாழுகின்ற சிங்கள மக்களிடம், தமிழ் மக்களுக்கு பிரச்சினைகள் உண்டென்றும் அவர்களுக்குரிய உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்றும் கூறி அவர்களின் ஆணையைப் பெற்றே வெற்றியடைந்துள்ளது.

இந் நிலையில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு தமிழ் மக்களது நியாயமான உரிமைகளை விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்து வைக்க விரும்புகிறது.

ஜனாதிபதிசந்திரிகாபண்டாரநாயக்கா குமாரதுங்கா நேற்றிரவு 8.05 மணிக்கு யாழ்குடாநாட்டு மக்களுக்குசெய்மதி மூலம் உரையாற்றும் போது மேற்கண்டவாறு கூறினார்.

(6ம் பக்கம் பார்க்க)

## எழுசிச்யுடன் நடந்த ஈ.பி.டி.பியின மேதினக் கொண்டாட்டம்
### ஆயிரக்கணக்கானமக்கள் பங்கேற்பு

(யாழ்ப்பாணம்)

ஈழ மக்கள ஜனநாயகக் கட்சியின் ஏற்பாட்டில்மேதின நிகழ்வுகள் யாழ். இந்துக் கல்லூரி மைதானததில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் யாழ் மாவட்டத்தில் உள்ள தொழிற்சங்கங்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டுக் கழகங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், மாதர் சங்கங்கள், ஆசிரியர் சங்கங்கள், மீனவா சங்கங்கள், விவசாய சம்மேளனங்கள், மற்றும் சுருட்டுத்தொழிலாளர் சங்கங்கள் என பல

→ 6ஆம் பக்கம் பார்க்க

# மத்தியில் கூட்டாட்சி; மாநிலத்தில் சுயாட்சி
# இதுவே தமிழருக்கு உரிமை தரும் நல்லாட்சி
### மேதின செய்தியில் அமைச்சர் டக்ளஸ்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கும் வாழும் மக்கள் இன, மத, தேச எல்லைகளைக்கடந்து உலகத்தொழிலாளர்களே ஒன்றுபடுங்கள் என உரத்துக் கூவி கரம் கோர்த்துக்கொள்ளும் தினமே மேதினமாகும்.

உழைக்கும் மக்கள் உரிமை கேட்டு எழுந்து நிற்கும் இவ்வீரியம் மிக்க நன்நாளில் தமிழ் பேசும் மக்களின் அடிப்படை அபிலாசைகளை உலகுக்கு எடுத்துரைப்போம்.

இவ்வாறு வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் வடக்கு கிழக்கு தமிழர் விவகார அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா குடாநாட்டுமக்களுக்கு விடுத்த மேதினச் செய்தியில்தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழர் பிரதேசத்தில் தொடரும் யுத்தம் அழிவுகளைத்தந்தும் அவலங்களை எல்லோர் மீதும் சுமத்தியுள்ளது. இதனால் எதிர்காலம் பற்றியநம்பிக்கைகள்சிதைந்து சமூகத்தின் அனைத்துத் தரப்பினரும் கண்ணீர் சிந்தும் நிலை ஏற்பட்டுள்ளது. எனவேதான் புதியதொரு அரசியல் பாதையில் காலடிஎடுத்து வைக்கவேண்டிய அவசர அவசியத் தேவை இம் மண்ணில் வாழும் அனைவருக்கும் உள்ளது.

பெறுமதி மிக்க போராளிகள் அர்ப்பணிப்புக் கொண்ட அரசியற் தலைவர்கள் துணிச்சல் மிக்க புத்திஜீவிகள் மற்றும் ஆயிரக்கணக்கான பொது மக்களை பலி கொடுத்து நிற்கிறது. இந்தத்துயரங்கள் இனியும் தொடரக் கூடாது.

→ 6ஆம் பக்கம் பார்க்க



## கனடியத் தூதர் தமிழ்செல்வனுடன் சந்திப்பு

(வவுனியா)

கனேடிய உயர் ஸ்தானிகர் றுக்அஸ்பேட் வன்னியில விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனுடன் பேச்சு நடாத்தியுள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதிக்கு விஜயம

(6ஆம் பக்கம் பார்க்க)

# கொடியயுத்தத்தை உடன் நிறுத்தி சமாதானம் ஏற்பட வழி செய்க

## மேதினக் கூட்டத்தில் தொழிற்சங்கங்கள் வலியுறுத்தின

(ஈச்சமோட்டை)

கோரமான யுத்தத்தை உடன் நிறுத்தி விரைவில் சமாதானத்தை ஏற்படுத்தும் முகமாக பேச்சுவார்த்தையை ஆரம்பியுங்கள் என சம்பந்தப்பட்டோரை வலியுறுத்தும் விதமாக யாழ்ப்பாணத்தில் இருபத்தேழு தொழிற் சங்கங்கள் இணைந்து தமது ஐக்கிய மேதினக் கொண்டாட்டங்களை நடாத்தின.

யாழ் நாவலர் கலாசாரமண்டபத்தில் 27 தொழிற் சங்கங்கள் இணைந்து தமது மேதின நிகழ்வுகளை கொண்டாடடின.

இதில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம், யாழ். பல்கலைக் கழக ஆசிரியர் சங்கம், காங்கேசன்துறை சீமெந்துத் தொழிலாளர் சங்கம் யாழ். மாவட்ட தபாற் சங்கம், வங்கியாளர் சங்கம், யாழ் மாவட்ட கூட்டுறவு ஊழியர் சங்கம், அரசாங்க இலிகிதர் சங்கம் என்பனவும் அடங்குகின்றன.

கொடூரப் போர் நடவடிக்கைகளால் நாட்டின் அமைதி குலைந்து போயுள்ள நிலையில், நாட்டில் நீதியான நிரந்தர சமாதானம் ஏற்படுவதையே ஒவ்வொரு தொழிலாளனும் விரும்புகிறான். என்று மே தினக் கூட்டத்தில் நேற்று வலியுறுத்தப்பட்டது.

(செ-9-59)

# ஆசிரியர் சேவை தரம் 1 பதவி உயர்விற்கு விசேட பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

இலங்கை ஆசிரியர் சேவை தரம் 1 இற்கு பதவி உயர்வு பெறுவதற்கான விசேடபயிற்சித் திட்டம் ஒன்றை தேசிய பயிற்சி நிறுவகம் நடாத்தி வருவதாக இலங்கை தமிழ் ஆசிரியர் சங்க நிர்வாக செயலாளர் ச. சரவணபவானந்தன் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், மேற்படி பயிற்சி நெறி ஜூன் மாதம் 1 ஆம் திகதி ஆரம்பமாக வுள்ளதாகவும் இதற்கான விபரங்கள் மே முதல் வாரம் அளவில் வர்த்தமானியில் வெளியிடப்படும்.

மேற்படி பயிற்சி நெறிக்கு ஏற்கனவே விண்ணப்பித்த ஆசிரியர்களும் திரும்பவும் விண்ணப்பித்து பயிற்சி நெறியை தொடங்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே வேளையில் மேற்படி பயிற்சி நெறி ஏற்கனவே நடை பெற்றுவந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க)

# கைவிடப்பட்ட காவலரணின் பனங்குற்றி வீழ்ந்ததில் ஒருவர் படுகாயம்

[மந்திகை]

படையினரால் கைவிடப்பட்ட காவலரணில் வைக்கப்பட்ட பனங்குற்றி தவறி வீழ்ந்ததில் படுகாயங்களுக்குள்ளான நபர் ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற இச்சம்பவத்தில் துன்னாலை கிழக்கைச் சேர்ந்த இரவிச்சந்திரன் ஜெகதீஸ்வரன் (வயது33)என்பவரே படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவராவார்.

(க-23)

# அதிபர்கள் கூட்டம் இன்று

(மந்திகை)

தென்மராட்சி கல்விவலயப் பாடசாலைஅதிபர்களுக்கான கூட்டம் இன்று 2 ஆம் திகதி புதன் கிழமை 2 30 மணிக்கு நெல்லியடி மத்தியமா வித்தியாலயத்தில் நடை பெறவுள்ளதாக வலயக்கல்விப் பணிப்பாளர் வ: செல்வராசா அறிவித்துள்ளார்.

(க-23)

# போரை நிறுத்தி புலிகளுடன் பேசுக

## மேதினச் செய்தியில் பல்கலை- ஊழியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

போரை நிறுத்தல், விடுதலைப்புலிகளுடன் பேசல் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாணல் என்னும் கருத்துக்களை முன்வைத்து தமது மேதினக் கோரிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக பல்கலைக் கழக ஊழியர் சங்கம் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அரச திணைக்கள பல்கலைக்கழக நிர்வாகிகள் சந்தர்ப்பவாத அரசியல் வாதிகளாக மாறுவது தவிர்க்கப் படவேண்டும் எனவும் அவ்வறிக்கையில் கேட்டுள்ளனர்.

(செ-9)

# பிந்துனுவெவ படுகொலை விசாரணை 4-ஆம் திகதி

(கொழும்பு)

பண்டாரவளை பிந்துனுவெவ புனர் வாழ்வு முகாம் படுகொலைகள் சம்பந்தமாக ஜனாதிபதி ஆணைக் குழு, விசாரணைகளை இம் மாதம் 4 ஆம் திகதி ஆரம்பிக்கவுள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ள இந்த விசாரணைகளுக்கு சாட்சியமளிப்பதற்கு இக் கொலைகளை கண்டித்த எந்தவொரு தமிழ்க் சட்சியும் இதுவரை முன்வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பண்டாரவளை பிந்துனுவெவ முகாமில் 29 தமிழ் இளைஞர்கள் படையினரால் வெட்டிக் கொல்லப்பட்டது தெரிந்ததே. எஞ்சிய தமிழ்க் கைதிகள் 12 பேர் புனர் வாழ்வு முகாமிற்கு தற்போது மாற்றப் பட்டுள்ளனர்.

(வ)

# இராசி பலன்

2/5/2001
(சித்திரை 19,புதன்)
நவமி காலை 6 46வரை
தசமி பி.இ 4 24வரை
மகம் மு.இ 7.17
ராகுகாலம் 11 57-1.27
நல்ல நேரம் 4 27-5 57
சித்தாமிர்தம்

**மேடம்**
வியாபார மேன்மை, தாழ்வுநிலை, குடும்பக் கவலை,உஷ்ண வியாதி.

**இடபம்**
தன்னம்பிக்கைக் குறைவு, மனப்பதட்டம்,முயற்சி தாமதம்,தாய்வழி உறவு.

**மிதுனம்**
இனிய நிகழ்வு, சகோதரர் உதவி, காரியநன்மை, அந்நியர் சந்திப்பு.

**கடகம்**
கௌரவக் குறைவு. பொருள் விரயம். முயற்சி தாமதம்,வீண் விவாதம்.

**சிங்கம்**
பெரியோர் ஆசி, ஆழ்ந்த சிந்தனை,சயனசுகம். ஜனவசியம்.

**கன்னி**
பிரயாணம்,மனச்கிலேசம், பணச் செலவு,காரிய தாமதம்.

**துலாம்**
கீர்த்தி,தனவரவு. காரியம் கைகூடும்.குடும்ப சுகம்.

**விருச்சிகம்**
தொழில சிறப்பு. அதிகாரம்,நல்லசெய்தி, முயற்சி கைகூடும்.

**தனுசு**
புதியதிட்டம்,கட்டுப்பாடு, பிரயாணம்.உடல் உபாதை.

**மகரம்**
வீண் பிரச்சினை, கடன் தொல்லை,காரிய தடங்கல், நோய் உண்டாதல்.

**கும்பம்**
போசனசுகம், பிரயாணம், தனவரவு,காரியம் கைகூடும்.

**மீனம்**
வியாதி குணமடைதல், முயற்சி விருத்தி, பகைவர் விலகுவர்,தனவரவு.

(பழைய நேரப்படி கணிப்பிடப் பட்டது)

வளவன்

# திருட்டுக்கள் அதிகரிப்பு பொது மக்கள் அச்சம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை கரம்பன் பகுதியில் கடந்த சில வாரங்களாக திருட்டுக்கள் அதிகரித்துள்ளதாக அப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். ஆட்களில்லாத வீடுகளில் ஓடுகள், கூரைமரங்கள் என்பவற்றைத் திருடர்கள் திருடிச் செல்கின்றனர்.

இதேவேளை அப்பகுதி மக்களின் பட்டி மாடுகளையும் இத் திருட்டுக் குழுனர் பிடித்துச் சென்று இறைச்சிக்காக வெட்டுவதாகவும் இதனைத் தட்டிக் கேட்க எவரும் முன் வராததனால் கள்வரின் கொண்டாட்டம் அதிகரித்துள்ளதாகவும், இதனால் அப் பகுதி மக்கள் மிகுந்த அச்சத்துடனிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(செ-104)

# எவரெஸ்ட் சிகரத்தில் ஏறிச் சாதனை படைத்தவர் மரணம்

(கொழும்பு)

உலகில் மிக உயரமான மலையான எவரெஸ்ட் சிகரத்தில் மிகக் குறுகிய நேரத்தில் ஏறிச் சாதனை படைத்த மலை ஏறும் வீரர் மரணமெய்தி விட்டார் என செய்திகள் தெரிவிக்கின்றன.

நேபாள நாட்டவரான பாபூஜிசேபா என்னும் வீரரே மரணமானவராவார்.

ஒட்சிசன் உதவியின்றி இருபத்தொரு மணி நேரம் எவரெஸ்ட்டில் தங்கியிருந்து சாதனை படைத்துள்ளார். என்பதுடன், பதினொரு தடவைகள் எவரெஸ்ட் சிகரத்தில் ஏறியவர் என்பது குறிப்பிடத்தக்கது,

(செ)

# அரசை கவிழ்க்கலாமென ஐ.தே.கட்சிகனவு காண்கிறது

## அமைச்சர் அலவி கருத்து

(கொழும்பு)

பொதுஜன ஐக்கியமுன்னணி அரசை கவிழ்ப்போமென ஐக்கியதேசியக் கட்சி பகற்கனவு காண்கிறது.

இருந்தும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை கவிழ்த்தாலும் ஜனாதிபதியின் கைகளில் ஆதிக்கம் உண்டு. எனவே அரசை கவிழ்ப்பபது என ஐக்கியதேசியக் கட்சி கூறுவது தவறாகும்.

இவ்வாறு பொது ஜன ஐக்கிய முன்னணியின் சிரேஷ்ட அமைச்சர் அலவி மௌலானா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஐக்கிய தேசியக் கட்சி கூறுவது போல் அரசைக் கவிழ்த்தாலும் ஜனாதிபதியாக சந்திரிகாவே இருப்பார். இதனால் அவர் தனது அதிகாரத்தின் மூலம் இவர்களின் அனாவசிய முயற்சியை முறியடிக்கலாம் என்றும் தெரிவித்துள்ளார்.

(வ)

# 'தூண்டல்' வடிக்கும் தூரிகைகள்

இதோ ஓர்
பூபாளத்தின் புறப்பாடு!
இந்த மலர்களின் ஞானவானம்
புலர்வது புதுமை!
விழிகளினாலே
விடிந்திடும் கல்வி
விழிகளைத் தேடும்
இளையவர் இங்கே———
புத்தகச் சிறைக்குள்
சித்தங்களை சிதறடித்தவர்கள்
இங்கு -
பித்துப் புரட்டிய
வித்தகராய் விளைகின்றனர்!

வெளிர் நீலமும், வெண்மையும்
துளிர்களின் போர்வை!
வளக் குறையை
உளக் குறையாக்கும் பழக்கமில்லை
இவர்கள் -
மர நிழல் மாளிகையில்
மகிழும் மலர்கள்!
பகிடி வதைகளைச் சிதைத்த
பண்பாளர்கள்!

கமல பீடத்தில் மலரும் இதழ்கள்
நாளை
புதுமை இசைக்கும்
புல்லாங்குழல்கள்!
தூண்டல் வடிக்கும்
தூரிகைகள்!
நாகரீக நடப்பைச் செய்யும்
நந்தவனங்கள்!

இனி
கல்விச் சர்ச்சைகளின்
சாக்கடைகளைப் புரட்டி
சரித்திரம் செய்ய
கல்வியியற் கல்லூரியான்
மெல்லென எழுவான்!

(யாழ். கல்வியியற் கல்லூரியின் ஓராண்டு பூர்த்தியை யொட்டிய கவிதை)

-மானியூர்ரட்ணேஸ்-


# பிரிவுத் துயர் பகிர்வு

## திருமதி நன்னித்தம்பி நாகம்மா

கொல்லங்கலட்டி தெல்லிப்பழையை நிரந்தர வசிப்பிடமாகவும், கந்தரோடை சுன்னாகத்தை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட நன்னித்தம்பி நாகம்மா நேற்று காலமானார்.

அன்னாரின்இறுதிக் கிரியைகள்இன்று கந்தரோடை மயானத்தில் நடைபெறும்.

தகவல்
ந. தர்மதேவன் (தம்பு)
(மகன்)

## இன்று ஒரு தகவல்

# கனவு காண்பதில் கவலை

கனவு காணாத இரவு பெரும்பாலும் யாருக்கும் இருப்பதில்லை. நாம் தூங்கும்போது, எவ்வளவு நேரம் தூங்குகிறோமோ; அதில் கால்வாசிநேரம் நாம் கனவுகளைக் காண்கிறோம்: இந்தக் கனவுகள் எதுவும் தொடர்ந்து வருவதில்லை: துண்டுதுண்டாகத் தொடர்பு இல்லாமல்தான் வருகின்றன. இன்பக் கனவுகள் வருகின்றன. துன்பக்கனவுகள் வருகின்றன. பயங்கரக்கனவுகள் வருகின்றன: கனவே இல்லாமல் வாழ முடியுமா? என்று சில விஞ்ஞானிகள் ஆராய்ச்சிசெய்து பார்த்தார்கள்.

கனவுகாணாமல் இருக்கச் சில மாத்திரைகளைக் கொடுத்துச் சிலரைத் தினமும் தூங்கவைத்தார்கள்: இவர்களுக்குக் கனவு வரவேயில்லை. ஆனால் இவர்கள் குணம்மாறிப் பைத்தியக்காரர்களைப்போல நடக்க ஆரம்பித்து விட்டார்கள்; இவர்கள் மறுபடியும் கனவுகளைக் காணத்தொடங்கியதும் சரியாகி விட்டார்கள்; இதிலிருந்து கனவுகளைக் காணமல் மனிதன் வாழமுடியாது. கனவுகள் நம்முடைய மனத்தில் அடக்கிஇருக்கும் உணர்ச்சிகளை வெளியேற்ற மிகவும் தேவை என்று கண்டுபிடித்திருக்கிறார்கள். எனவே, இனிமேல் கனவு கண்டுகொண்டிருப்பவர்கள் கவலைப்பட வேண்டியதில்லை.

நன்றி
கல்கண்டு
9-6-66

# தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு பேச்சுக்களே தீர்வாக அமையும்

## பிரதிப் பாதுகாப்பமைச்சர்

(கண்டி)

அரசாங்கம் இந்த நாட்டில் நிலவுகின்ற பயங்கரவாதத்தை அடியோடு ஒழிப்பதற்காக போரை நாடி வருகிறது: தமிழ் மக்களின் பிரச்சினைக்கு பேச்சு வார்த்தைகள் மூலமே தீர்வு காணப்பட வேண்டும்.

இதன் அடிப்படையில் தான் நோர்வே இனப் பிரச்சினை தீர்வுக்கான சமாதான முயற்சிகளில் ஈடுபட்டு வருகிறது என்று பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த கண்டியில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் தெரிவித்துள்ளார்.

கண்டியில் மே தினம் கொண்டாடுவதற்கான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது, ஐக்கிய தேசியக் கட்சி கனவு காண்பது போல் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசை அவ்வளவு சுலபமாக சதி முயற்சி மூலம் கவிழ்க்க முடியாது என்றும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசே தொடர்ந்தும் ஆட்சியில் இருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

(வ)

# எறிகணைவெடிக்கவில்லை அதிபர் உயிர் தப்பினார்

(வவுனியா)

அக்கினிச் சுவாலை-1 இராணுவ நடவடிக்கையின் போது பூநகரிப்பகுதி நோக்கி ஏவப்பட்ட எறிகணை தம்பிராய்ப் பாடசாலை அதிபர் அலுவலகக் கூரையை துழைத்தவாறு வெடிக்காத நிலையில் அதிபரது மேசையில் வீழ்ந்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

பதற்றமடைந்த மேற்படி பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரை நாடி எறிகணையை அகற்றியுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. (செ-9)

## வைத்தியசாலைகளின்செயற்பாடுகளைஆராய

# அதிகாரிகள் குழு யாழ். விஜயம்

(மந்திகை)

பிராந்திய சுகாதார சேவைகள் மாகாணப்பணிப்பாளரின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளின் செயற்பாடுகளைப் பரிசோதிப்பதற்காக சுகாதாரத்திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரிகள் குழு ஒன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்துள்ளது.

திருகோணமலை மாகாண சுகாதாரப் பணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து வந்த இக்குழுவினர் இங்குள்ள வைத்தியசாலைகளின் செயற்பாடுகள், கணக்காய்வுகள் போன்றவற்றில் ஈடுபடும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி குழுவினர் இம் மாதம் 17 ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் தங்கி இருந்து தமது பரிசோதனைகளை நிகழ்த்துவார்கள்:

(செ-9-23)

# இயங்காத நிலையில் சுகாதார நிலையம்

[ஊர்காவற்றுறை]

நாரந்தனை மத்தியில் அமைந்துள்ள ஆரம்ப சுகாதார நிலையம் இயங்காத நிலையில் இருப்பதனால் இப்பகுதி பொதுமக்கள் பெருஞ் சிரமத்திற்குள்ளாகுவதாக கவலை தெரிவிக்கப்படுகின்றது.

இச் சுகாதார நிலையம்புனரமைக்கப்பட்டு இரண்டு வருடங்களாகியும் இயங்குவதற்குரிய எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இப்பகுதியில் தற்பொழுது அதிகளவிலான மக்கள் மீளக் குடியமர்ந்துள்ளார்கள்;

இவர்களில் குழந்தைகள் கர்ப்பிணித்தாய்மார்கள், சிகிச்சை பெறுவதற்காக சில மைல் தொலைவிலுள்ள புளியங்கூடல் சுகாதாரநிலையத்திற்கோ அல்லது, ஊர்காவற்றுறை மாவட்ட வைத்தியசாலைக்கோ செல்லவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

இது விடயம் குறித்து சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் விரைவில் உரியநடவடிக்கைகளை மேற்கொண்டால் மக்களின் சிரமங்கள் குறைக்கப்படும் என பொது மக்கள் தரப்பில் கருத்துத் தெரிவிக்கப்படுகின்றது. (செ-75)

# வீணர்கள் அட்டகாசம் பொதுமக்கள் கவலை

(சங்கானை)

அண்மைக் காலமாக வீதிகளில் வீணர்களின் அட்டகாசம் அதிகரித்துள்ளதனால் மக்கள் வீதியில் உறைந்துள்ளமையினை அவதானிக்க முடிகின்றது:

கூட்டம் கூட்டமாகத் திரியும் இவ் விளைஞர் குழுக்கள் திடீர் திடீரென வீதிகளில் அடிதடியில் இறங்கி விடுகின்றனர்.

இதனால் வீதியால் செல்வோர் வீண் அசௌகரியங்களுக்குட்படுகின்றனர்.

அத்துடன் இவ் வீணர் கூட்டம் இளம் பெண்களுடன் தகாத முறையில் சேஷ்டை புரிய முற்படுவது, கிண்டலான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொள்ளுதல் போன்ற அநாகரிக செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர்.

இத்தகைய கூட்டத்தினர் போதையில் காணப்படுவதும் மிகவும் வேதனைக்குரிய விடயமே:

நாளைய சந்ததியினருக்கு முன்மாதிரியாகத் திகழ வேண்டிய இளைஞர்களே இவ்வாறு நடந்துகொள்கின்றமை குறித்து சமூகநலன் விரும்பிகள் மிகுந்த கவலை வெளியிட்டுள்ளனர்.

(செ-14)

# வீதி திருத்தும் பணிஆரம்பம்

யாழ்ப்பாணம் ஈச்ச மோட்டைவீதி திருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திருத்தப் பணிகள் மழை காரணமாக மந்த கதியில் நடைபெற்ற போதிலும் தற்போது துரிதகதியில் செப்பனிடப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது

[செ-59]

# திருட்டு

(சுழிபுரம்)

யாழ்ப்பாணம் பழைய வண்ணார்பண்ணை தபாற் கந்தோர் வீதியிலுள்ள ஆனந்தா அச்சக உரிமையாளர் வீட்டில் பெறுமதிமிக்க டெக்கும் வானொலிப் பெட்டியும் பெண்கள் அணியும் கைக்கடிகாரமும் ஒரு தொகைப் பணமும் களவாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமை இரவு வீட்டார் உறக்கத்தில் ஆழ்ந்திருந்த வேளை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

(செ-ப-10)

★ ★ ★

[ஊர்காவற்றுறை]

ஊர்காவற்றுறை நாரந்தனை தெற்கில் ஆட்கள் வெளியே சென்றிருந்தசமயம் வீட்டிற்குள் நுழைந்த திருடர் பல ஆயிரம் ரூபா பெறுமதியான பொருட்களைக் களவாடிச் சென்றுள்ளனர்.

சம்பவதினம் இரவு உறவினர் வீட்டிற்கு படம் பார்க்கச் சென்றதை அவதானித்த திருடர் தமதுகைவரிசையை காட்டிச் சென்றுள்ளனர். (செ-75)

# பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

கூட்டுறவுக்கல்லூரி வடக்கு கிழக்கு மாகாணம திருகோணமலையினால் நடாத்தப்பட்ட கூட்டுறவுப்பணியாளர் தராதரப்பத்திர உயர்பயிற்சிநெறி இறுதிப்பரீட்சை முடிவுகள் நேற்றுவெளியாகியுள்ளன. இப்பரீட்சைமுடிவுகள் வருமாறு.

கூட்டுறவுச் சங்கப்பணிப்பாளர்கள்·

திருமதி. த. இரத்தினேஸ்வரி(கைதடி ப.நோ.கூ.சங்கம்)

கோபாலகிருஷ்ணன் (சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்கம்)

திருமதி ச.பரமானந்தம் (யாழ் மாவட்ட சி.க.கூ.ச சமாசம்)

வெளிவாரி மாணவர்கள் இ.தீசன், நடதுளசிதாஸ், செ.நற்குணம், அ.பிரேம்நாத் க.ஜெயசீலன், தே.ஜெயானந்தன்.ப.சத்தியரூபன்·

நூனசித்திஅடைந்தோர் விபரம்வருமாறு கு.சுதர்சன், சி.தயாபரன். சி: திருநாவுக்கரசு

# மண்ணெய் அருந்திய சிசு ஆஸ்பத்திரியில் அனுமதி

[மந்திகை]

குப்பி விளக்கில் இருந்த மண்ணெண்ணெயை அருந்திய குழந்தை ஒன்று மயக்க முற்ற நிலையில் பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

கரவெட்டி யாக்கருவைச் சேர்ந்த பாலகிருஷ்ணன் சுந்தரி என்னும் ஒன்றரை வயது குழந்தையே மண்ணெண்ணெய் அருந்தியமை குறிப்பிடத்தக்கது.

(செ-9-23)

# முத்துடன் பொலிஸ் அதிகாரி நீர்கொழும்பில் கைது

(கொழும்பு)

நீர்கொழும்பு நகைக்கடையொன்றில் 4 கோடி ரூபா பெறுமதியான முத்துக்களை விற்கச் சென்றவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்:

மேற்படி நபர் ஒருபொலிஸ் அதிகாரி என்றும அவரை நீர்கொழும்பு பொலிஸர் கைது செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

இம் முத்துக்கள் இவருக்கு கிடைத்தது பற்றி பொலிஸர் விசாரணைகளை நடத்தி வருகின்றனர் (செ)

# துர்நாற்றத்தினால் பொது மக்கள் அவஸ்தை

(மந்திகை)

துன்னாலைவேரோண்டை மயானப் பகுதியில் அமைக்கப்பட்ட கொல்களத்தில் இருந்து கழிவுகள் அகற்றப்படாமையினால் துர்நாற்றம் வீசுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபைக் குட்பட்ட இம்மயானப் பகுதியில் உள்ள இக்கொல்களத்தில் வெட்டப்பட்ட மாடு, ஆடுகளின் கழிவுகள் உரிய சுகாதார முறையில் அகற்றப் படாததாலேயே இத் துர் நாற்றம் எழுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் உரிய நடவடிக்கை எடுத்தால் பொது மக்களின் அசௌகரியம் தீரும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(செ-9-23)

# எறிகணைத் தாக்குதல் மக்கள் இடம்பெயர்வு

(வவுனியா)

பூநகரியின் வடபகுதி மீது படையினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதல் மற்றும் விமானத் தாக்குதல்களால் அப்பகுதியில் இருந்து ஆயிரக்கணககான மக்கள் இடம் பெயர்ந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இடம் பெயர்ந்து பாடசாலைகள் மற்றும் கோவில்களில் தங்கி இருக்கும் இவர்களுள் இரண்டாயிரத்து ஐநூறு மாணவர்களும் அடங்குவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இடம் பெயர்ந்து சென்ற மக்களை கிளிநொச்சி வலய கல்விப்பணிப்பாளரும் அரச செயலக உயர் அதிகாரிகளும் சந்தித்து தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கு உறுதி அளித்துள்ளனர். (செ-09 05,

# வணிக கல்வியும் கணக்கீடும் இன்னமும் இங்கு வரவில்லை

## மாணவர் மத்தியில் விசனம்

(செம்பியன்பற்று)

கல்வி அமைச்சினால் யாழ் குடாநாட்டிற்கு என அனுப்பி வைக்கப்பட்ட மூன்றாம் தொகுதி இலவசப் பாடநூல்களில் தரம் 10, 11, இற்கான ''வணிக கல்வியும் கணக்கீடும்'' என்னும் புத்தகம் அனுப்பிவைக்கப்படவில்லை என புகார் தெரிவிக்கப்படுகிறது.

குறிப்பிட்ட பாடத்திற்கான கைநூல் கூட அனுப்பி வைக்கப்படவில்லையெனவும் இதனால் குறிப்பிட்ட பாடத்தை கற்பிக்கும் ஆசிரியர்களும், மாணவர்களும பெருமசிரமத்தை எதிர்நோக்குவதாக தெரிவிக்கப்படுகிறது.

தரம் 11 இல் கற்கும் மணவர்கள் இவ்வருட இறுதிப் பகுதியில பரீட்சைக்கு தோற்ற இருப்பதால் குறிப்பிட்ட பாட நூல் வராமை மணவர்களை பெரிதும் பாதிக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (க-42)

# தரம் 5 புலமைப் பரிசில் பயிற்சி வினாத்தாள்

## வினா இல - 15

ஆக்கம் : செல்வி

★ பின்வரும் சொற்களைப் பிரித்தெழுதுக

01) தென்றிசை ————————
02) கருப்புவேலி ————————
03) ஐங்கரம் ————————
04) மூவுலகு ————————
05) பொற்றசடு ————————

★ பின்வரும் சொற்களுக்குரிய எதிர்க் கருத்துச் சொல்லைத் தருக?

06) உம்பர் ————————
07) காய்தல் ————————
08) பாலர் ————————
09) மடமை ————————
10) ரூபி ————————

★ பின்வரும் வினாக்களுக்குரிய விடையைத் தருக.

11) தங்கத்தாத்தா என அழைக்கப்படுகின்ற ஈழத்துப் புலவர் யார்?
12) முதிர்ச்சியடைந்த மனிதனில் காணப்படும் எலும்புகள் எத்தனை?
13) அமெரிக்காவின் தேசியப் பறவை எது?
14) சர்வதேச தொழிலாளர் தினம் எப்போது அனுஷ்டிக்கப்படுகின்றது?
15) இந்து சமுத்திரத்தின் முத்து என அழைக்கப்படும் நாடு எது?

★ பின்வரும் ஆங்கிலச் சொற்களுக்குரிய தமிழ்ப்பதத்தை தருக?

16) Notice beard ————————
17) Wastepaper -basket ————————
18) I ragonfly ————————
19) Flamin o ————————
20) Festival ————————

★ பின்வரும் வினாக்களுக்குரிய விடையைத் தருக?

21) வெள்ளை நிற செப்புசல்பேற்றுக்கு நீர் சேர்த்தால் உண்டாகும் மாற்றம் யாது?
22) எரிசோடாவுக்கு நீர் சேர்க்கும் பொழுது ஏற்படும் மாற்றம் யாது?
23) அனைத்தும் உண்ணிகள் இரண்டு தருக?
24) தூரதிருட்டிக் கண்ணாடியை (தொலைக்காட்டி) முதன் முதலில் கண்டுபிடித்தவர் யார்?
25) சிவபெருமான் நரிகளைப் பரிகள் ஆக்கிய தினம் எது?

★ பின்வரும் சொற்களின் கருத்தை தருக.

26) உதவாக் கட்டை ————————
27) இலைமறைகாய் ————————
28) ஓட்டாண்டி ————————
29) எடுப்பார் கைப்பிள்ளை ————————
30) கட்டியடித்தல் ————————

★ பின்வரும் பாடலைப் படித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடை தருக.

"சிறுநண்டு மணல் மீது படமொன்று கீறும்.
சிலவேளை அதை வந்து கடல் கொண்டு போகும்
கறிசோறு பொதியோடு தருகின்ற போதும்
கடல் மீது அவள் கொண்ட பயம் ஒன்று காணும்

31) இப்பாடல் யாரைப் பார்த்துப் பாடுவதாக சித்திரிக்கப்படுகிறது?
32) இப்பாடலில் இருந்து இவர்கள் செய்யும் தொழில் யாது எனக் கூறு?
33) கடல் மீது அவளுக்கு ஏன் பயம் ஏற்படுகின்றது?
34) இக் குடும்பத்திற்கு எங்கிருந்து உணவு கிடைக்கின்றது?
35) மணலில் படம் கீறும் பிராணி எது?

★ பின்வரும வினாக்களுக்குரிய விடையினைத் தருக?

36) ஒரு தோட்டத்தில் கத்தரிச் செடிகளும், தக்காளிச் செடிகளும் உ. ளன. ஒவ்வொரு கத்தரிச் செடியையும் அடுத்து மூன்று தக்காளிச் செடிகள நாட்டப்பட்டுள்ளன. வரிசையில முதலாவதாக நாட்டப்பட்டிருப்பது கத்தரிச் செடியாகும். தோட்டத்தில் எல்லாமாக இருபத்தைந்து செடிகள் காணப்படின் தக்காளிச் செடிகள் எத்தனை?

குமரனுக்கு ராகினி என்ற ஒரேயொரு சகோதரி உண்டு. இவள் சீலன் என்பவரை மணந்துள்ளாள். இவர்களுக்கு பிறந்த குழந்தை மஹி, குமரன் தம்பதிகளுக்கு சுகி என்ற பிள்ளை உண்டு.

37) மஹி, சுகியை என்ன முறை சொல்லி அழைப்பாள்?
38) சுகி, ராகினியை என்ன முறை சொல்லி அழைப்பாள்?

கவியின் வயது பதினேழு, குவி கவியிலும் இரண்டு வயது கூடியவன், புவி குவியை விடவும் ஐந்து வயது குறைந்தவன்.

39) ஏழு வருடங்களின் பின் புவியின் வயது என்ன?
40) இவர்களில் மிகவும் வயது கூடியவர் மிகவும் வயது குறைந்தவர் யார்?

குறிப்பு :-
விடைகளை வேறு தாளில் எழுதி அனுப்பவும் இதற்கான விடைகளை 8-05 2001 இற்கு முன் எமக்குக் கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.

# புலமைப் பரிசில் பரீட்சை

## வினா இல - 14

அதி கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் பெயர் விபரம்

★ இந்திரன் சபிதா, யா- அல்லாரை அ. த. க. பாடசாலை
★ சண்முகம் தீபிகா, யா- புற்றளை. ம வி.
★ சரவணமுத்து சபேசன், யா- சாவ- இந்து ஆரம்பப் பாடசாலை
★ ஜெயக்குமார் ஜெனித்தா, யா-நாகபூசணிவித்தியாலயம் நயினாதீவு
★ சின்னத்தம்பி லகீசன் ஆனைக்கோட்டை சென்ற் ஆன்ஸ் மானிப்பாய்
★ சனகரத்தினம் கோபிகா, இணுவில் இந்துக் கல்லூரி
★ ந நிலுஷிபா, யா- புலோலி மெ மி த க பாடசாலை
★ தெ. சஜரஞ்சிதன் யா- புற்றளை ம வி.
★ திருச்சபேசன கிருபன், யா- கொக்குவில் இ: ஆ: பாடசாலை
★ ச. பிரவீணா, கரந்தன் இராமுப்பிள்ளை வித்.
★ ம. மேரி றெபிக்கா, யா- திருக்குடும்ப கன்னியர் மடம்
★ கு. மேரியசிந்தா யா- திருக்குடும்பக் கன்னியர் மடம்
★ சற்குணராசா கார்ந்திகா, வட்டு மத்திய கல்லூரி
★ விக்னேஸ்வரன் மிதுலா, யா- துன்னாலை காசிநாதன் வித்.
★ சி. கஜந்தினி, யா- சாவ- இந்து ஆ. பாடசாலை
★ உ. நிவேதா, வட்டு: யழ்ப்பாண க்கல்லூரி,
★ தர்ஷிகா துரைநாயகம், அ. மி. த. க. பாடசாலை ஆனைக்கோட்டை
★ தி. தனம்ஜெயன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
★ மு. நிவேதா, யா- சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
★ ப. திலக்ஷனா, அராலி முருகமூர்த்தி வித்தியாலயம்
★ ந. அனுஜன், யா- அராலி. சரஸ்வதி ம. வித்தியாலயம்
★ மோ. துவாரகன், யா- அராலி சரஸ்வதி ம. வித்.
★ இ. பாமா, துன்னாலை மேற்கு மெ. மி. த. க. பாடசாலை
★ பரம்சோதிநாதர் தாமரா, யா- இந்து ஆரம்பப் பாடசாலை
★ வி. கோகுலன், சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை
★ ஜெ. ஜெனித்தா, தேவரையாளி இந்துக் கல்லூரி
★ சு. கோகுலன், புற்றளை மகா வித்தியாலயம்
★ ச. நிவேதிகா, கோப்பாய் நாவலர் வித்தியாலயம்
★ கடோற்கஜன், யா- இந்து ஆரம்பப் பாடசாலை
★ வே. விஜிக்குமார், வல்வை ம. ம. வித்தியாலயம்
★ சி. பிரணவன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை
★ இ. பிரதிகா, சரசாலை ஸ்ரீ கணேசவித்தியாலயம்
★ ச. கிரிதரன், யா- இந்து ஆரம்பப் பாடசாலை
★ அ. வசிகரன், அல்வாய் றோ. க. த. க. பாடசாலை
★ யோ. செபஸ்ரியன், மானிப்பாய் றோ. க. த. க. பாடசாலை
★ பா. கௌசிகா, தாவடி இ த. க. பாடசாலை
★ சி. நிருபா, மருதனார் மடம் இராமநாதன் கல்லூரி
★ க. நிறோஜினி, யா- புனித மரியாள் வித்தியாலயம்
★ நி. பிரசாந், அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம்
★ பா. ஷாயிசங்கர், வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி

## கல்விப் பகுதி
## வினா இல-15

"வலம்புரி"
இல: 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர்: ....................
சொந்த முகவரி: ....................
கற்கும் பாடசாலை: ....................
மாணவர் கையொப்பம்: ....................

இப்படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாளுடன் தவறாது இணைத்து அனுப்பிவைக்கவும்.

# புலமைப் பரிசில் பரீட்சை

## வினா இல-14 விடைகள்

01) மெய்க்கீர்த்தி
02) தமிழப்பிள்ளை
03) தாழக்கோல்
04) கன்மனிதன்
05) பற்பசை
06) தேவராட்டி
07) நம்பிக்கை
08) எயிற்றி
09) அபகீர்த்தி
10) குயுத்தி
11) அருணகிரிநாதர்
12) அதிகாலையில்
13) பெத்தலெகேம்
14) பெரியவெள்ளி
15) பௌத்தமதத்தவர்
16) இந்தியா
17) தசாப்தநிறைவுவிழா / தசரவிழா
18) கோடைக்காற்று
19) வோல்ட்டிஸ்னி
20) சர்வதேசபுத்தக தினம்
21) மிருகக்காட்சிச்சாலை
22) அனுபவம்
23) வாகனம்
24) ஒழுங்குபடுத்துதல்
25) நூலகம்
26) நாற்று
27) வடலி
28) தாள்
29) முத்து
30) பந்தி
31) வெளிப்படையாக புகழ்ந்தும், மறைபொருளில் இகழ்ந்தும் கூறுவது
32) அரண்மனைகளிலே மகளிர் தங்குவதற்கு அமைந்த தனியிடம்
33) அவையிற் சொல்லத்தகாத சொல்லை மறைத்து வேறு சொல்லால் கூறுவது
34) கலைநிகழ்ச்சிகளை மேடையேற்றுதற்கு முன் சரிபிழை பார்த்துத் திருத்தும் நிகழ்ச்சி
35) அரசன், குரு, பெரியோர், குழந்தைகள் ஆகியோரைக் காணச் செல்வோர் கொண்டு செல்லும் உபகாரப் பொருள்
36) முப்பத்தியாறு ரூபாய்
37) இருபது சிவப்பு ரோஜாக்கள்
38) வெள்ளைநிறம்
39) எழுநூறுரூபா
40) இருநூறுரூபா

# தற்கொலைப் பிரிவு இராணுவத்திற்கு தேவை

(கொழும்பு)

இராணுவத்தால் தற்கொலைப் படையணி ஒன்றை உருவாக்க வேண்டுமென சிங்கள இளைஞர்கள் தம்மிடம் கோரியுள்ளதாக கொழும்பு தர்மநாயக்க விகாரதிபதிஎல்லைகுணவர்த்தன தேரர் கூறியுள்ளார்.

விடுதலைப்புலிகளின் தற்கொலைப் படைக்குச் சவாலாக, இராணுவத்திலும் தற்கொலைப் படையை உருவாக்கினால் தாம் அதில் இணைவதற்கு தயாராக இருப்பதாகவும் இளைஞர்கள் கூறியுள்ளதாக தெரிவித்த தேரர் இளைஞர்களிடமிருந்து எழுத்து மூலம் பெறப்பட்ட கடிதம் ஒன்றை அமைச்சுக்கும் அனுப்பி வைத்துள்ளார். (ந)

# தலையில் துலாமோதியதில் வயோதிபர் படுகாயம்

(மந்திகை)

கிணற்றில் தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்த வேளை துலாவந்து தலைப்பகுதியில் மோதியதில் காயமடைந்த நபர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

துன்னாலை வடக்கைச் சேர்ந்த கதிரவேற் பிள்ளை தனபாலசிங்கம் (வயது47) என்ற முதியவரே காயங்களுக்குள்ளான நிலையில்பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (க-23)

# புலிகள் தரப்பில் உயிரிழந்தோர் விபரம

(வவுனியா)

கடந்த 25 ஆம் திகதிக்கு பின்னர் தென்மராட்சியில் இடம்பெற்ற அக்கினிச் சுவாலை இராணுவ நடவடிக்கை முறியடிப்புச் சமரின் போது உயிரிழந்தவர்களுள் ஆறு பேரின் பெயர் விபரங்கள் வருமாறு.

★ லெப். மதநிலா (முருகானந்தம் ஜெகதீஸ்வரி) மன்னார்.

★ 2ம் லெப். தன்நிலா (அந்தோனிப்பிள்ளை, மேரி கொன்சலா நந்தினி) யாழ். மாவட்டம்.

★ பிறைமகள் (சுவாம்பிள்ளை மேரி கச்சியாந்தினி யாழ் மாவட்டம்

★ கப்டன் இளையகீதன் (துனேஸ்வரப்பிள்ளை யோகேஸ்வரன்) யாழ். மாவட்டம்.

★ மேஜர் குகன் குன்றக்குமரன் (புவனேஸ்வரன் தவராசா) முழங்காவில்

★ இளமுகில் செல்வநாயகம் மரிசலின்முள்ளியவளை;

ஆகியோர் தமது தரப்பில் உயிரிழந்துள்ளதாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (ந-5)

விரைந்து தொழில் கேட்குஞ் ஞாலம் நிரந்தினிது
சொல்லுதல் வல்லார்ப் பெறின்
- குறள்

வலம்புரி

## நொண்டிச் சாட்டு

அக்கினிச் சுவாலை படை நடவடிக்கை தோல்விகண்டதையடுத்து தகவல் துறை அமைச்சு 18 பக்கங்களில் அறிக்கை ஒன்றை வெளிட்டது. அவ் அறிக்கையில் விடுதலைப் புலிகள் சமாதானப்பேச்சு வார்த்தைக்கு வருவார்கள் எனத்தாம் எதிர்பார்த்ததாகவும்- இப்போதும் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு முன் வருவார்கள் என நம்புவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளால் ஒருதலைப்பட்சமாக நான்கு மாதங்கள் வரை யுத்த நிறுத்தம் நடைமுறைப்படுத்தப்பட்ட போது ஏன்? எதற்கு? எனக் கேட்காத அரசாங்கம் இப்போது நொண்டிச் சாட்டுக்கள் கூறி 18 பக்கங்களில் அறிக்கைவிட்டது விசித்திரமானதே. உண்மையாக உள்ளார்ந்த விருப்பத்தோடு அரசாங்கம் சமாதான முயற்சிகளை விரும்பியிருப்பின் புலிகளால் அறிவிக்கப்பட்டயுத்தநிறுத்தத்திற்கு அரசு ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுத்திருக்க முடியும்.

ஆனால் அதுபற்றி அப்போது எதுவும் சிந்திககாது விட்ட அரசாங்கம் எப்படியும் விடுதலைப்புலிகளை தோல்வி காணச் செய்து ஆனையிறவை மீட்டு விடுவோம் என்ற நப்பாசையில் அக்கினிச் சுவாலை - 1 என்றபடை நடவடிக்கையை ஆரம்பித்தது.

ஆனையிறவு படைத்தளத்தை புலிகளிடம் இழந்ததனால் ஏற்பட்ட அவமரியாதையை போக்குவதாக இருந்தால் மீண்டும் அத்தளத்தைக் கைப்பற்றுவதே ஒரேவழி.

அவ்வாறு ஆனையிறவுத் தளத்தைக் கைப்பற்றுவதன் மூலமே படையினரின் பலத்தை வெளியில் காட்ட முடியும்என்ற கருத்து படை உயர் அதிகாரிகளிடம் இருந்திருக்க வேண்டும்.

அதன் விளைவே அவசர அவசரமாக அக்கினிச் சுவாலை படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டது. முடிவு பேரிழப்பு, பின்வாங்கல்.

எனினும் புலிகளுடன் அரசு பேசுவதற்கு படையினரே தடையாக இருப்பின் அக்கினிச் சுவாலையில் ஏற்பட்ட தோல்வி அரசு தனது சமாதான முயற்சியை முன்னெடுக்கவும், படையினரின் பலம் இவ்வளவுதான் என்பதை உணர்ந்து கொண்டு செயலாற்றவும் உதவும்,

# வன்னி மாணவர்களின் வாழ்வியல் அவலங்கள்

# சொல்லவொண்ணாத சோகக்கதைகள்

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய வன்னிப் பெரு நிலப்பரப்பிலிருந்து யாழ். பல்கலைக்கழகத்திலுள்ள அனைத்து பீடங்களிலும் மற்றும் ஆசிரியர் பயிற்சி கலாசாலை, தொழில்நுட்பக் கல்லூரி, உடற்கல்வியியல் துறையிலும் மாணவர்கள் தமது உயர் கல்வியினைத் தொடர்ந்து வருகின்றனர்.

### எதிர்நோக்கும் சவால்கள்

இம் மாணவர்கள் தம் கல்விப் பயணத்தில் பெரும் பொருளாதார நெருக்கடியுடன் தமது பெற்றோரிடமான சீரானதொடர்பின்மை வதிவிடப் பிரச்சினை, வருகைக் காலங்களில் கூட தமது வீடுகளுக்குச் செல்ல முடியாத நிலையிலும் இவை எல்லாவற்றிற்கும் மேலாக பாதுகாப்பு நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்து தமது உயர் கல்வியினைத் தொடர்ந்து வருகின்றனர்.

இதனால் ஏற்பட்ட உடல் உள பாதிப்புகளுடனேயே தமதுகல்வியைத் தொடர்ந்து வருகின்றனர். இவ்வாறான சூழ் நிலைகளில் தமது குடும்பங்களுக்குள் ஏற்படுகின்ற உயிர் இழப்புக்களில் கூட கலந்து கொள்ள முடியாமல் பல மாணவர்கள் அந்த மன அழுத்தத்துடனேயே தமது கல்வியைத் தொடர்கின்றனர். இவ் உண்மைகள் அவர்களுக்குள் உறங்கிப் போகும் ஒன்றாகவே நோக்க வேண்டியதாயுள்ளது.

## கிளிநொச்சி மாவட்ட மாணவர் ஒன்றியம்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

### சிவபாலனின் திடீர் மறைவு

எமது மாவட்டத்திலிருந்து ஆசிரியர் பயிற்சி கலாசாலைக்கு தெரிவு செய்யப்பட்டு கடந்த ஒரு வருடமாக தமது கற்கையைத் தொடர்ந்து கொண்டிருந்த எமது மாவட்ட மாணவன் செல்வன் பாலசிங்கம் சிவபாலனின் திடீர் மறைவு வன்னிப் பகுதி மாணவர் எல்லோரையும் பெரும் அதிர்ச்சியிலும் ஆழ்ந்த கவலையிலும் ஆழ்த்தியுள்ளது. வெற்றுடலையாவது வன்னிப் பகுதிக்கு அனுப்புவதற்கு மாணவர்கள் எடுத்த பகீரத பிரயத்தனம் இன்று நாம் எவ்வாறான இறுக்கமான சூழ்நிலைக்குள் இருக்கின்றோம் என உணரும் போது ஆழ்ந்த கவலையாகவும், வேதனையாகவும் உள்ளது. இது விடயமாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் தொடர்பு கொண்ட போது அவர்களது இறுக்கமான சட்ட விதிகள் சாதாரண சிவிலியன் மட்டில் இவ்வாறான மனிதாபிமான உதவிகளைச்செய்யக் கூடிய வகையில் இல்லை என்பது தெளிவாகியுள்ளது இருந்த போதும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் காட்டிய ஆர்வத்திற்கும் எடுத்த நடவடிக்கைகளுக்கும் எமது ஒன்றியத்தின சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக் கொளகின்றோம். இனிவரும் காலங்களிலாகிலும் சிவிலியன்கள் விடயத்தில் சில ஆக்கபூர்வமான விடயங்களை எடுக்க வேண்டும் என்பதே எமது அவா ஆகும்.

### வேதனை தரும் விடயம்

இன்று யாழ்ப்பாணத்தில் உயர்கல்வி நிறுவனங்களில் கல்வி கற்கும் மாணவர்கள் அரசாங்கத் தரப்பால் பிழையான விதத்தில் நோக்கப்படுவது மிகவும் கவலைக்குரிய தொன்றே. எம் மாணவர்கள் தமது உள்ளத்துணர்வுகளை வெளிக்கொணர்வதோடு நாட்டின் அமைதியும சமாதானமுமான சூழ்நிலை ஏற்படுவதற்காக உண்மையாக உழைக்கும் நிலைமைகாணப் படுகின்றது.

இவ்வாறான ஒரு சமாதான சூழ்நிலையில் தான் தமது கற்கை நெறிகளை சீராக தொடர முடியும் என்ற மன உந்தல்களே இவர்களது உள வெளிப்பாடாகும்.

இவ்வாறாக இவர்கள் முன்னின்று செயற்படும் போது அதை வேறுவிதமாக திரிவுபடுத்தி எம் மாணவர்களைச் சந்தேகக் கண் கொண்டு பார்ப்பது எமக்கு ஆழ்ந்த கவலையையும் மனவேதனையையும் தருகிறது

எமது மாணவனின் இம் மறைவும் மறைவுக்குப் பின்னால் அவனது வெற்றுடலையாவது அவனது பெற்றோர் கரம் சேர்வதில் உள்ள இடர்களும் வெளிக்காட்டுவது என்னவெனில் நீண்டு செல்லும் இவ் இனப்போர் விரைவில் விடைபெற்று எமது மண்ணில் அமைதியும் சமாதானமும், சுபீட்சமுமான ஒரு சூழ்நிலை உருவாக வேண்டும் என்பதேயாகும் இதற்காக நாம் தொடர்ந்து உழைக்கவும் குரல் கொடுக்கவும் ஆயத்தமாகவுள்ளோம்.

இம் மாணவனின் வெற்றுடலை அனுப்புவதில் உதவி செய்த அனைத்து அன்புள்ளங்களையும் நன்றியோடு நினைவில் கொள்கின்றோம். அத்துடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

## பேச்சுவார்த்..

1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மாறி சிங்கள இராணுவத்தினருக்கே பேரழிவைஏற்படுத்தியது. இக் கொடுஞ் சமரில் நூற்றுக்கணக்கான அப்பாவிச் சிங்கள இளைஞர்கள் தமது இன்னுயிர்களை இழந்தார்கள். மேலும் ஆயிரக்கணக்கானோர் உடற்சேதம் அடைந்தார்கள்; போர், படையெடுப்பு என்ற முட்டாள்தனமான கொள்கைக்கு பெரும் உயிரிழப்பாகவும் இரத்தக் களறியாகவுமே சந்திரிகா அரசு விலை கொடுத்து வருகிறது. புலிகளின் போர் நிறுத்தத்தை ஏற்று அமைதியைப் பேண இணங்கியிருந்தால் இத்தகைய மாபெரும் மனித அவலத்தை தவிர்த்திருக்கலாம் அல்லவா? என புலிகளின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

விடுதலைப்புலிகளின் தலைவர் திரு. பிரபாகரனுக்கும் நோர்வேயின் சமாதானத் தூதுவருக்கும் மத்தியில் நிகழ்ந்தவரலாற்று முக்கியம் வாய்ந்த சந்திப்பை அடுத்தே கடந்த ஆண்டு கிறிஸ்மஸ் பெருநாளுக்கு முன்தினம்புலிகள் இயக்கம் ஒரு தலைப்பட்சமான போர் நிறுத்தத்தை அறிவித்தது. இந்த போர் ஓய்வுப்பிரகடனத்தைஅடுத்து வடகிழக்கில் சகல இராணுவ நடவடிக்கைகளையும்நிறுத்தி கொழும்பிலும். தென்னிலங்கையிலும் சகல வன்முறைத் தாக்குதல்களையும் தவிர்த்து நாம் எமது போர் நிறுத்தத்தை செம்மையாக. கண்டிப்பாக நடைமுறைப்படுத்தி வந்தோம். ஆயினும் சிங்கள ஆயுதப்படையினர் எமது படையணிகளுக்கு எதிராகவும், எமதுபடைநிலைகளுக்கு எதிராகவும் வலிந்த தாக்குதல்களை நடத்தினால் புலிப் படை வீரர்கள் பாதுகாப்புப் போரில் ஈடுபடுவது தவிர்க்க முடியாதது என நாம் பகிரங்கமாகவே அறிவித்திருந்தோம்; நாம் ஒரு தலைப்பட்சமாகப் போர் நிறுத்தம் கடைப்பிடித்து வந்த காலகட்டத்தில் நாம் சிங்கள ஆயுதப் படையினரை பல தடவைகள், தரையிலும், ஆகாயத்திலும், கடலிலும் தற்காப்புப் போரில் முகம் கொடுக்க நேரிட்டது.

### தற்பாதுகாப்பிற்காக நவீன ஆயுதங்களைப் பாவித்தோம்

கடந்த நான்கு மாத காலத்தில் சிங்களப் படையினர் எம்மீது வலிந்த தாக்குதல்களை நடத்தியது மட்டுமன்றி மாறி மாறித் தொடர்ச்சியாக எமது நிலைகள் மீது விமானக் குண்டு வீச்சுக்களையும் பீரங்கி, எறிகணைத் தாக்குதல்களையும் நிகழ்த்தி எமக்குஆத்திரமூட்டிவந்திருக்கிறார்கள். தற்காப்புப்போர் செய்யும் தன்னுரிமையின் அடிப்படையில் எம்மீது இவ்விதம் தாக்குதல்கள் நிகழ்ந்த போது நாமும் பீரங்கிகளையும் விமான எதிர்ப்பு ஆயுதங்களையும் பாவித்தது உண்மை தான். இவை முற்றுமுழுதாக தற்காப்பிற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் இதனைக்கொண்டு எமது போர் நிறுத்தத்தை நாமே மீறியிருக்கிறோமென அரசாங்கம்கூறுவதுமுற்றிலும் தவறானதாகும். விடுதலைப் புலிகளை இப்பூமியிலிருந்து வேரோடு அழிப்போமென சூளுரைத்து வரும்ஒருஈவிரக்கமற்ற எதிரியை எதிர்கொள்ளும்போதுதற்பாதுகாப்பைத் தவிர்ப்பது தற்கொலைக்குத் தப்பானதாகும். நாம் அப்படியான ஏமாளிகளல்ல. ஆயுதப் படைகளின் ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளின் மத்தியிலும் நாம் மிகவும் இறுக்கமாக சுய கட்டுப்பாட்டைப் பேணி வந்தோம். ஆயினும் தற்காப்புத் தந்திரோபாயங்களைக் கடைப்பிடித்துநீண்ட காலத்திற்கு அமைதியைப் பேணிவந்ததால் எமது தரப்பின் உயிர்ச் சேதம் சகித்துக் கொள்ள முடியாத அளவிற்கு அதிகரித்தது. அத்துடன் இராணுவ ரீதியான புதிய சிக்கல்களும் எழுந்தன இதன் காரணமாகவே, நாம் இம்முறை, எமது ஒருதலைப்பட்சமான போர் நிறுத்தத்தை நீடிப்பதில்லையென முடிவெடுத்தோம். சமாதானப்பேச்சுக்கு உகந்ததான ஒரு சமாதானச் சூழ்நிலையைத் தோற்றுவிக்கும நோக்கத்துடனேயே நாம் போர் நிறுத்தத்தை அறிவித்திருந்தோம்.

இந்தத் தீவில் அமைதியும், உறுதியான நிலையும் ஏற்படுவதை அரசாங்கம் உண்மையில் விரும்புமானால் எமது போர் நிறுத்தத்திற்கு மதிப்பளித்து ஏற்றுக் கொள்ளுமென நாம் நான்கு மாதங்களாக எதிர்பார்த்துக் காத்திருந்தோம். ஆனால் கொழும்பிலுள்ள ஆட்சியாளர்கள் எமது போர் நிறுத்த நடவடிக்கையின் நேர்மையான, ஆக்கபூர்வமான நோக்கத்தினைப்புரிந்து சொள்ளாதது மட்டுமன்றி, எமது சமாதான முயற்சியை அரசியல் ஏமாற்று வித்தை எனவும்ஏளனம்செய்துவந்தது எமக்குக்கவலையையும் ஏமாற்றத்தையும் கொடுத்தது. நான்கு மாத காலத்திற்கு நாம் அமைதியைப் பேணியதோடு, எமது போர் நிறுத்தத்தை ஏற்றுக் கொள்ளுமாறு சிறீலங்கா அரசுக்கு அழுத்தம் கொடுக்கும்படி உலக நாடுகளையும் நாம் வேண்டி வந்தோம். ஆனால் எமது வேண்டுகோள் பயனளிக்கவில்லை இந்தச்சூழலில் நாம் போர் நிறுத்தத்தைக் கைவிட முடிவெடுத்தோம். ஆயினும், நாம் முடிவெடுத்த ஒரு சில மணிநேரத்தில்யாழ்குடாவின் தென்பகுதியில் ஒரு பாரிய இராணுவப் படையெடுப்பை நிகழ்த்தித் தனது உண்மையான முகத்தை. போர் முகத்தை சிங்கள அரசு உலகத்திற்கு அம்பலப்படுத்தியது. பொய்யும், புரட்டும் புனைகதையுமாக விடுதலைப் புலிகள் மீது நீண்டதொரு குற்றப் பத்திரிகையைத் தாக்கல் செய்திருக்கும் சிறீலங்கா அரசின் தகவல் ஊடகத்துறை அமைச்சரிடம் நாம் ஒரு கேள்வியைவிடுக்கவிரும்புகிறோம் நீங்கள் குற்றஞ் சாட்டியுள்ளது போல, சமாதானத்திற்கான ஒரு அரிய சந்தர்ப்பத்தைப் பாழாக்கியது யார்? நீங்களா, நாங்களா? நான்கு மாதங்களாக நாம் அமைதியைப் பேணியவாறு உங்களது அரசிடமிருந்து ஒரு நல்ல பதிலுக்காக எதிர்பார்த்துக் காத்திருந்தோம் அல்லவா. உங்களது அரசு தான் அமைதியைப் பேண மறுத்தது. எமது விடுதலை இயக்கம் மீது ஒரு கொடிய போரையும் தொடுத்தது ஆகவே சமாதானத்திற்கான அரிய சந்தர்ப்பத்தைப் பாழாக்கியது உங்களது அரசு தான் இவ்வாறு விடுதலைப் புலிகளின் தலைமைச் செயலக அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது.

சமாதானத்திற்கான போர் என்ற பழைய படுபாதகமான கொள்கையை சிறீலங்கா அரசு இன்னமும் கைவிடவில்லை என்பது இப்பொழுது தெட்டத்தெளிவாகத் தெரிகிறது. இராணுவ ஆக்கிரமிப்பின் மூலம தமிழர் தாயகத்தை அடிமை கொள்ள வேண்டும் என்ற திட்டத்தில் இந்த அரசு இன்னும் சிக்குப்பட்டுக் கிடக்கிறது இதேகாரணத்தினால் தான்.

சமாதானப் பேச்சுக்களுக்கு முன்னராக சமாதானப் புறநிலையைத் தோற்றுவிப்பதற்கு அரசாங்கம் மறுத்து வருகிறது. இதன் காரணமாகவே, நல்லெண்ண முயற்சிகளோ அன்றி அமைதிபேணுதலோ, பேச்சுவார்த்தைகளுக்கு அவசியமில்லையென சந்திரிகா பகிரங்கமாகவே அறிவித்துவருகிறார் இந்தப் பிரச்சினையில் எமது விடுதலை இயக்கம் தனது நிலைப்பாட்டைத் தெட்டத்தெளிவாக விளக்கியிருக்கிறது. ஒரு நாசகார யுத்தத்தில் ஈடுபட்டவாறு சமாதானப் பேச்சுக்களில் பங்கு கொள்வதற்கு எமது இயக்கம் தயாராக இல்லை. பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு முன்னராக, கள நெருக்கடியின் கதாநாயகர்களாக விளங்கும் இரு தரப்பினரும் போர் நிறுத்தம் பேண வேண்டும் என்பதே எமது உறுதியான நிலைப்பாடாகும்.''

### போர் நெருக்கடியை தவிர்க்க பரஸ்பர நல்லெண்ணம் தேவை

''இரு தரப்பினரும் பரஸ்

→ 6ஆம் பக்கம் பார்க்க

அற்புதமான வடிவமைப்புக்களைக் கொண்ட அழகியதங்க நகைகளுக்கு நங்கையர் நாடும் இடம்

**நியூ ராதிகாஸ்**

**நகை மாளிகை**

189. கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்

(கி/ 1872)

## கனடியத்

மேற்கொண்டிருந்த உயர் ஸ்தானிகர் அங்கு தமிழ்ச் செல்வனுடன் நீண்ட நேரம் இனப்பிரச்சினைத் தீர்வு மற்றும் யுத்த அனர்த்தத்தால் தமிழ் மக்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடிகள் குறித்து பேச்சு நடாத்தினார்

இச் சந்திப்பின் போது விடுதலைப் புலிகளின் அரசியற் பிரிவு நிர்வாகப் பொறுப்பாளர் தங்கன் மற்றும் புலித்தேவன், ஜோர்ச் தொல்காப்பியன் ஆகியோரும் இடம் பெற்றிருந்தனர். [இ-5]

## எழுச்சியுடன்

பொது அமைப்புக்கள் கலந்து கொண்டன.

நல்லூர் கந்தசாமி கோவிலில் பி பகல் 2.00 மணியளவில் தொழிலாளர்கள் மற்றும் பொது அமைப்புக்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கானோர் ஒன்று கூடினர்.

அங்கிருந்து ஊர்திகள் சகிதம் மக்கள், ஊர்வலமாக யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தை வந்தடைந்தனர். மேதின நிகழ்வுகளில் கலந்து கொண்ட ஆயிரக்கணக்கான மக்களால் இந்துக்கல்லூரி மைதான வீதிகளில் நெருக்கடி நிலை ஏற்பட்டது.

பெருமளவில் பொலிசாரும் இராணுவத்தினரும் குவிக்கப்பட்டு சோதனைகளும் தீவிரமாக இடம்பெற்றது. மேதின விழா மைதானம் சிகரங்கள் பதாதைகள், வர்ணக்கொடிகள் மற்றும் மின்சாரக் குமிழ்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

ஊர்வலத்தில் தாங்கி வந்த பதாதைகளில் ''அரசே போரை நிறுத்தி சாமதானம் செய்'' ''அரசே கடற்தொழிலை நிறுத்திப் பட்டினி போடாதே'' மீன்பிடி நேரத்தை அதிகரி' யாழ். குடா நாட்டுக்கு தரைவழிப் பாதையை திற'' ''நிவாரணத்தை வெட்டி ஏழைகளை பட்டினி போடாதே'' ''மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை உதாசீனம் செய்யாதே'' ஆகிய வாசகங்கள் பொறிக்கப்பட்டிருந்தது.

இந்துக் கல்லூரியில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் மாலை நிகழ்வுகள் 6.30 மணிக்கு நல்லூர் பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பி யாழ். மாவட்ட உதவி அமைப்பாளருமான க. மணிபல்லவராஜன் தலைமையில் நடைபெற்றது.

மேற்படி மேதின எழுச்சி நிகழ்வில், பிரதமவிருந்தினராக பாராளுமன்ற உறுப்பினரும் யாழ். மாவட்ட ஈ.பி.டி.பி பிரதம அமைப்பாளருமான கே. வி. குகேந்திரன் கலந்து கொண்டார்.

விசேட விருந்தினர்களாக வலிமேற்கு பிரதேச சபைத் தலைவர் ந.திரிலோகநாதன், பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ. சிறிரங்கேஸ்வரன், நெடுந்தீவு பிரதேச சபைத் தலைவர் அ. வெ: அரியநாயகம், வேலணை பிரதேச சபைத் தலைவர் வே. கருணாகரகுருமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றினர், கலை நிகழ்வுகளும் இடம் பெற்றது. (இ-2-10-106)

## பேச்சுவார்த்தைக்கு----

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரம் நல்லெண்ண முயற்சி மேற்கொள்வதன் மூலமாக போர் நெருக்கடியை படிப்படியாகத் தணிப்பதே நோர்வேயிடம் சமர்ப்பித்த புரிந்துணர்வுப் பிரகடனத்தின் குறிக்கோளாகும்- சென்ற ஆண்டு நவம்பர் மாதம் இந்த ஆவணம் எமக்குக் கையளிக்கப்பட்டபோது, புலிகளின் தலைமைப்பீடம் அதனைக் கொள்கையளவில் ஏற்றுக் கொண்டது. ஆனால் சிறிலங்கா அரசு இந்த ஆவணத்தை ஆரம்பத்தில் அலட்சியம் செய்தது. நோர்வேக்கு பதிலளிக்காது இழுத்தடித்தது. அத்துடன் இந்த ஆவணத்தின் இருப்பைக்கூட மறுத்துவந்தது. பின் சமீப காலத்தில்தான் சிறிலங்காவின்வெளிவிவகார அமைச்சர் திரு கதிர்காமர் இந்த ஆவணத்தின் தலைப்பிலும் முன்னுரையிலும், உள்ளடக்கத்திலும் திருத்தங்களை செய்ததுடன், பெற்றோல், டீசல், சீமெந்து, இரும்பு கம்பிகள் போன்ற அத்தியாவசியப் பொருட்களுக்குமிகவும் இறுக்கமான கட்டுப்பாடுகளை விதித்தார். இதன் காரணமாக, கட்டுப்பாடுகளைத் தளர்த்தும் நோக்குடன் தொடர்ந்தும் கருத்துப் பரிமாற்றங்கள் நிகழ்ந்தன. இறுதியில் ஒரு சில தினங்களுக்கு முன்னர்தான் (25ந் திகதி ஏப்பிரல்) எமது பார்வைக்கும் அங்கீகாரத்திற்கும் திருத்தப்பட்ட ஆவணத்தை நோர்வேஅரசு எமக்கு அனுப்பிவைத்திருக்கிறது, இருந்த போதும் இந்த ஆவணத்தில் மேலும் சிலபிரச்சினைகளுக்கு விளக்கம் தேவைப்படுகிறது. இப்படியான சூழ்நிலையில் தான் சிறிலங்கா அரசானது யாழ்ப்பாணத்தில்எமதுநிலைகள்மீது ஒரு பாரியபடையெடுப்பை நிகழ்த்தியது. இந்த வலிந்த தாக்குதல் நடவடிக்கையால் ஒரு முழு அளவிலான மோதல் வெடித்துப் போர் விரிவாக்கம்கண்டது! இவ்விதம் ஆயுதப் போர் விரிவாக்கம்பெற்றதால் முற்றிலும் புதிதான ஒரு புறநிலை தோற்றப்பாடு கண்டிருக்கிறது. போர்ச் சூழலாக உருவகம் பெற்றிருக்கும் இப் புதிய புறநிலை எமது பார்வையில் போரைத் தணிக்கும் நோர்வேயின் சமரசத்திட்டத்திற்கு முரண்பட்டதாக ஒத்திசைவற்றதாக அமைந்து விட்டது.

### அமைதிச் சூழலிலேயே பேச்சுவார்த்தை சாத்தியம்

நோர்வேயின் சமாதான முயற்சிக்குப் பங்கம் ஏற்படுத்தி, நோர்வேயின் புரிந்துணர்வுப் பிரகடனத்தை ஒரு பயனற்ற, அர்த்தமற்ற ஆவணமாகச் செய்துவிட்டதன் முழுப்பொறுப்பையும் சிறிலங்கா அரசாங்கமே ஏற்க வேண்டும். விடுதலைப் புலிகளுக்கு எதிரான சகலபோர் நடவடிக்கைகளையும் நிறுத்தி போரைத்திணித்து வடகிழக்கில் இயல்பு நிலையை தோற்றுவிக்கும் ஒரு ஆக்க பூர்வமான நடவடிக்கையாக நோர்வேயின் புரிந்துணர்வுப் பிரகடனத்தை சிறிலங்கா அரசு ஏற்றுக்கொள்ளுமானால் நாமும் இந்த ஆவணத்தை முழுமைபெறச் செய்துஏற்றுக்கொள்ளத்தயாராக இருக்கிறோம். நெருக்கடியை தணித்து, பகைமையை நீக்கி, சமாதானப் பேச்சுக்கு ஏற்றதான சமாதான சூழலை உருவாக்கும் நோக்குடன், இருதரப்பினர் மத்தியிலும் நம்பிக்கையையும் நல்லெண்ணத்தையும் வளர்ப்பதே நோர்வேயின் பிரகடனத்தின் இலட்சியமாகும். தகவல், ஊடகத்துறை அமைச்சு கற்பிப்பதுபோல, இந்த ஆவணமானது, இருதரப்பினரையும் அவசர அரசரமாக பேச்சுவார்த்தையின் மேசைக்கு இட்டுச்செல்லும் வழிமுறையாகக் கருதுவது தவறு. விடுதலைப் புலிகள் இயக்கமானது தமிழீழ மக்களின் உண்மையான பிரதிநிதிகளாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டுமென்றும் போர் நிறுத்தம் வாயிலாக உருவாக்கப்படும் ஒருநிலையானஉறுதியான அமைதிச் சூழலில்தான் சமாதானப் பேச்சுக்கள் நிகழ்வது சாத்தியமென்றும் நாம் தொடர்ச்சியாக தெளிவாக உறுதியாக எடுத்துரைத்து வருகின்றோம் என்றும் விடுதலைப் புலிகளின் அந்த அறிக்கை மேலும் கூறுகின்றது.

## மத்தியில்

இந்தவகையில் மத்தியில் கூட்டாட்சி மாநிலத்தில் சுயாட்சி அதுவே எம்மக்களுக்கு நல்லாட்சி எக்காலமும் பிரிக்க முடியாத வடக்கு கிழக்கு மாநிலத்துக்கு விசேட அதிகாரங்களுடன் பூரண சுயாட்சி இன ஒற்றுமையுடன் ஐக்கிய இலங்கைக்குள் சமாதான சகவாழ்வைக் கட்டியெழுப்புதல் ஜனநாயக அரசியல் சூழலை உருவாக்குதல் ஆகியகுறிக்கோளுடன் செயற்படுவோமென்று அமைச்சர் டக்ளஸ் கூறியுள்ளார். [இ]

தங்க நகை உலகில் மங்காப் புகழ் பெற்ற தங்க ஆபரணங்களின் சாம்ராஜ்யம்

**மகாநதி ஜுவல்லறி**

72A, கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்.

(கி/1871)

## வன்னியில் மே தினம்

இராணுவக் கட்டுப்பாடற்ற புதுக்குடியிருப்பில் மே தினம் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

புதுக்குடியிருப்பு மகாவித்தியாலய விளையாட்டு இசை அணிவகுப்புடன் சிவன்கோவில் முன்றலில் இருந்து நேற்றுப்பிற்பகல் ஊர்வலம் ஆரம்பமானது இவ்வூர்வலத்தில் தலைவர் பிரபாகரனின் படமும் எடுத்துச்சென்றனர்.

## அரசின்

னமிரவு ஜனாதிபதியுடன் நோர்வே தூதுவர் பேசியது தொடர்பாகவும் ரணிலிடம் எடுத்துக்கூறப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க ரணில் விக்கிரமசிங்கா, நோர்வே தூதுவரிடம், அரசின்சமாதானப் பேச்சுவார்த்தையில் நம்பிக்கையீனம் ஏற்பட்டு இருப்பதாகவும், அக்கினிச் சுவாலை-1 படை நடவடிக்கை பற்றியும் எடுத்துக் கூறியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழ்மக்களுக்கு

ஜனாதிபதி சந்திரிகா செய்மதி உரையில் மேலும் கூறியிருப்பதாவது

புலிகளுடன் பேசி சமாதானமாக தீர்வு காண்பதையே சர்வதேச சமூகமும் விரும்பி நிற்கின்றது இதனடிப்படையில் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்டபாராளுமன்ற உறுப்பினர்களுடன் பல்வேறு சந்தர்ப்பங்களில் பேசுவதற்கு அரசாங்கம் ஈடுபட்டிருந்தது.

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பித்து நோர்வேயின் மத்தியஸ்தத்துடன் ஒப்பந்தமொன்றைஏற்படுத்த முற்படும் வேளையில் புலிகள் புதிய நிபந்தனைகளை விதித்துள்ளார்கள் இந்நிலையிலும் அரசாங்கம் தனது சமாதான முயற்சிகளைக் கைவிடாது நோர்வேயின் முயற்சியுடன் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறது.

தமிழ் பேசும் மக்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகள் பற்றி எம்மிடம் தெளிவான கொள்கையுண்டு எனவே தமிழ் மக்கள் தமது உரிமைகளை பெறுவதற்கு யுத்தத்தில் ஈடுபடவேண்டிய அவசியமில்லை.

யாழ் குடாநாட்டு மக்கள் ஆத்மீகத் துறையில் ஈடுபட்டுள்ளார்கள் கல்வியில் சிறந்து விளங்குகிறார்கள் அவர்கள் சமாதான விழியில் நம்பிக்கை உடையவர்கள் விடுதலைப் புலிகளை சமாதனப்பேச்சிற்கு கொண்டு வருவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை தமிழ் மக்கள்எடுக்கவேண்டும் என்றும்கேட்டுக்கொண்டார்.

கொழும்பு - திருகோணமலை - ஹப்புத்தலை
திருமறைக் கலாமன்ற கலைஞர்களின் இணைவில்

**யாழ். திருமறைக் கலாமன்றம்**

நடத்தும்

**★ தமிழ் விழா - 2001 ★**

மே 05-13 வரை (9 நாட்களுக்கு)

**சனிக்கிழமை கோலாகல ஆரம்பம்**

★ நாடகங்கள் ★ நாட்டுக்கூத்துக்கள் ★ நடனங்கள் ★ கவியரங்கம்
★ இசைக் கச்சேரி ★ இசை நிகழ்ச்சி ★ கருத்தரங்குகள் ★ சொற்பொழிவுகள்
★ பாராட்டு விழாக்கள் ★ நூல் வெளியீடு ★ ஒலிநாடா வெளியீடு
ஆகிய அனைத்தும் தமிழ் விழாவை அலங்கரிக்கின்றன

முதல் நாள் நிகழ்வுகள் 05-05-2001 மாலை 6மணிக்கு
மன்ற அரங்கில் ஆரம்பமாகும்

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.**

238 பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 2393

திருமறைக் கலாமன்றம்

(கி-1897)



எழில் குன்றா அழகிய தங்க நகைகளை அசல் 22 கரட்டில்
செய்து பெற்றுக்கொள்ள யாழ் நகரில் -----

**நியூ நகுலா ஜுவல்லறி**

**74, கஸ்தூரியார் வீதி, - - - - - யாழ்ப்பாணம்.**

**நியூ லலிதாஸ் ஜுவல்லறி**
171, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[கி-1878]

**நகுலா நகைமாடம்**
241G, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை ''வலம்புரி'' அச்சக ஸ்தாபனத்தாரால் இல. 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2001 ஆண்டு மே மாதம் 02ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது